## முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு

**SCOP .No. 79/2022**

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதி PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திரு.B.முருகேசன் பி.ஏ.,பி.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | வான்மதி | ஜாதி |
| த/க. பெயர் | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுக்கா | | வயது |
| மாவட்டம் | | |

PW1 - முதல் விசாரணை : (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

ம.சா.1 ஆகிய நான் இந்த அசல் மனுவில் 1 ம் மனுதாரர். 2 ம் மனுதாரர் என் சகோதரி. என் தரப்பு முதல் விசாரணை நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். எங்கள் அப்பா தங்கமுத்து 27.10.2020 ல் காலமாகிவிட்டார். அவரின் இறப்பு சான்றிதழ் கணினி வழி நகல் **ம.சா.ஆ.1**. என் தாயார் கிரேஸ் பொன்னுதாயி கடந்த 28.05.2021 ல் காலமாகிவிட்டார் அவரின் இறப்பு சான்றிதழ் கணினி வழி நகல் **ம.சா.ஆ.2**. எங்களின் சகோதரர் வேந்தன் கடந்த 24.05.2021 ல் காலமாகிவிட்டார் அவரின் இறப்பு சான்றிதழ் கணினி வழி நகல் **ம.சா.ஆ.3**. எங்கள் சகோதரர் வேந்தனுக்கும், அவருடைய மனைவி ரேச்சல் நிர்மலாவிற்கும் கடந்த 01.04.2015 ல் நீதிமன்றத்தின் மூலம் விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது. அந்த விவாகரத்து உத்தரவு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4**. என் சகோதரர் வேந்தனுக்கு எங்கள் இருவரை தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை. எங்களுக்கும், என் சகோதரருக்கும் இடையேயான உறவுமுறையை காட்டும் சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **ம.சா.ஆ.5**. என் சகோதரர் சேலம், ரீஜினல் பிராவிடட் பண்ட் கமிஷனர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்தார். ஆகவே அவரின் இறப்பின் பலன்களை அவரின் சகோதரிகளான நாங்களே சட்டப்படி பெறுவதற்கு உரிமையானவர்கள். ரீஜினல் பிராவிடட் பண்ட் கமிஷனர் அலுவலகத்தில் இருந்து இது சம்பந்தமாக வழங்கப்பட்ட

கடிதம் அசல் **ம.சா.ஆ.6**. என் ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **ம.சா.ஆ.7**. என் சகோதரியின் ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **ம.சா.ஆ.8**. இந்த ஆவணங்களை குறியீடு செய்து கொண்டு மனுப்படி தீர்ப்பு செய்ய பிரார்த்திக்கின்றேன்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை : (வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

**SCOP No**. 79/2022

நாள் : 16.04.2025

பெயர் : வான்மதி

PW1 : 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை : (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

2 ம் எதிர்மனுதாரரும், அவர் கணவர் வேந்தனும் பவானியில் 10 ஆண்டுகளாக குடித்தனம் செய்தார்கள் என்றால் சரிதான். என் தம்பி வேந்தன் இறப்பதற்கு முன்பு 2 ம் எதிர்மனுதாரருடன் சென்னம்பட்டியில் ஒன்றாக இருந்த விவரம் தெரியுமா என்றால் அவ்வாறு ஒன்றாக இருக்கவில்லை. என் தம்பி இறப்பதற்கு முன்பு நான் கோயம்புத்தூரில் குடியிருந்தேனா என்றால் இல்லை; பவானியில் என் அப்பா வீட்டில் வாடகைக்கு குடியிருந்தேன். தன்னை இறந்த வேந்தனின் வாரிசு என அறிவிக்கக் கோரி 2 ம் எதிர்மனுதாரர் பவானி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.122/2021 என வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கை மறைத்து இந்த வழக்கில் 2 ம் எதிர்மனுதாரரை காட்டாமல் இந்த வழக்கை ஆரம்பத்தில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.5 வாரிசு சான்றிதழ் 2 ம் எதிர்மனுதாரருக்கு தெரியாமல் மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. இறந்த வேந்தனின் பணிப்பதிவேட்டில் 2 ம் எதிர்மனுதாரர் நாமினியாக காட்டப்பட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இறந்த வேந்தனின் பணப்பலன்களை தனக்கு வழங்கக்கோரி 06.07.2021 ல் 2 ம் எதிர்மனுதாரர், 1 ம் எதிர்மனுதாரருக்கு கடிதம் கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. 20.07.2021 ம் தேதியிட்டு 2 ம் எதிர்மனுதாரர் வட்டாட்சியருக்கு கொடுத்த ஆட்சேபனை கடிதம் எனக்கு தெரியாது. தனக்கு விவாகரத்து வழங்கப்பட்ட உத்தரவை என் தம்பி வேந்தன் 1 ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த உத்தரவை 1 ம் எதிர்மனுதாரரிடம் நான் கொடுத்தேனா என்றால் நினைவில்லை. (2 ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)